சுருக்கம்

பொதுப் பணிகள் – கல்வித் தகுதிகள் – தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தால் தொலைதூரக் கல்வி வாயிலாக வழங்கப்படும் பி.எட் (B.Ed) பட்டத்தினை (Two Year Programme) தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களால் முறையாக வழங்கப்படும் பி.எட் (B.Ed) பட்டத்திற்கு (One Year Programme) இணையாக கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்புகள் வழங்குவதற்கு உரிய தகுதியாக அங்கீகரித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எம் 2) துறை

அரசாணை (நிலை) எண். 112, நாள். 28.07.2011.

(திருவள்ளுவர் ஆண்டு 2042
ஆடி 12)

படிக்கப்பட்டவை

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 20.12.1993.
2. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 22599/M1/2009, நாள் 28.10.2009.
3. அரசுக் கடித எண்.35830/M2/2009-3, நாள் 25.01.2010
4. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண் 3266/ஆர்.என்.டி.எப்-1/2010, நாள் 19.07.2011
5. சென்னை உயர்நீதிமன்ற ரிட் மனு எண் 10847 முதலான 22 ரிட் மனுக்களில் பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 04.02.2011
6. மேல்முறையீடு மனு எண்.2506-2508/2010, 486-488, 490-492/2011 முதலானவைகளில் வழங்கப்பட்ட இடைகாலத் தீர்ப்பாணை நாள் 13.07.2011

www.crsttp.blogspot.com

ஆணை :-

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தொடக்கக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், சாஸ்த்ரா பல்கலைக் கழகம் வழங்கும் பி.எட்., பட்டச் சான்றுப் பெற்றவர்கள் தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களால் முறையாக வழங்கப்படும் பி.எட்., பட்டத்திற்கு இணையாக

(த.பி.பா)

கருதி பணி நியமனம், பதவி உயர்வு மற்றும் ஊக்க ஊதியம் ஆகியவற்றைப் பெறுதல் சார்பாக அரசின் அங்கீகாரம் வேண்டி இப்பொருள் மீதான அரசின் ஆணையினை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2) மேற்காணும் கருத்துரு மீது மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்ட தேர்வாணைய இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையைப் பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) 19.07.2011 அன்று நடைபெற்ற இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் கலந்தாய்வு கூட்டத்தில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தால் தொலைதூரக் கல்வி வாயிலாக வழங்கப்படும் பி.எட் (B.Ed) பட்டத்தினை (Two Year Programme) தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களால் முறையாக வழங்கப்படும் பி.எட் (B.Ed) பட்டத்திற்கு (One Year Programme) இணையாக கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்புகள் வழங்குவதற்கு அங்கீகரித்தல் எனும் பொருள் மீது "Recommended" என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும், மேற்காண் குழுவின் பரிந்துரையின் மீது அரசாணை வெளியிடுமாறும் மேலே 4–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அரசை கேட்டுக்கொண்டது.

4) அதன்படி இணைக்கல்வி நிர்ணய பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையை அரசு நன்கு பரிசீலித்தபின் அதனை ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் மூலம் தொலை தூர கல்வி வாயிலாக வழங்கப்படும் பி.எட். (B.Ed.,) பட்டத்தினை (Two year Programme) தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களால் முறையாக வழங்கப்படும் பி.எட்., பட்டத்திற்கு (One year programme) இணையானதாக கருதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்புகள் வழங்குவதற்கு அங்கீகரிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

5) மேலும், இப்பொருள் சார்பாக மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட 04.02.2011 நாளிட்ட தீர்ப்பாணையில் சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

> "For the reasons stated, these writ petitions are allowed. A writ in the nature of mandamus is issued to the respondents 1 to 3 herein, to enter B.Ed., qualification of the petitioners in the service Registers, and grant them all the consequential benefits flowing under G.O.Ms.No.42 as amended from time to time, by treating the petitioners to be having a duly recognized degree of B.Ed.,"

6) மேலே பத்தி 4–ல் ஆணையிடப்பட்டவாறு சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் மூலம் தொலை தூர கல்வி வாயிலாக வழங்கப்படும் பி.எட். (B.Ed.,) (Two year Programme) பட்டச் சான்றுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்ட நிலையில் இப்பட்டச் சான்று பெற்ற ஆசிரியர்கள் பதவி உயர்வு மற்றும் ஊக்க ஊதிய உயர்வு பெற

தகுதியுடையவர்கள் ஆவார்கள் என்பதால் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையை நடைமுறைப்படுத்திட உரிய மேல் நடவடிக்கை தொடர பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசுச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை–6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
பதிவாளர்கள், தமிழகப் பல்கலைக் கழகங்கள்,
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்)துறை, சென்னை–9.

www.crsttp.blogspot.com

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

(கையொப்பம்) 28.7.11
பிரிவு அலுவலர்